**OS No.1/2023**

PW 1 – சுரேஷ்கண்ணன்

நாள் 10.09.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

2 இலக்க சொத்திற்கு வழக்கு போட்டுள்ளேன். என் சொத்து எண் 340/13, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து 340/11 ஏ, மற்றும் 340/11 பி ஆகும். தாவா சொத்து என்னுடையது என்பதை காண்பிக்க என்ன ஆதாரம் என்று கேட்டால் பூர்வீக சொத்து ஆகும். சொத்து பட்டா என் அப்பாவின் பெயரில் உள்ளது.

வா.சா.ஆ 1 ஆவணம் எதற்கா தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது என் அப்பா பெயரில் சொத்து உள்ளதை காண்பிக்க தாக்கல் செய்துள்ளேன். வழக்கு விபரத்தை என் அப்பா தான் சொன்னார். வழக்குரையில் என் அப்பா சொல்லிய விபரங்கள் எனக்குத் தெரியும். என் அப்பாசொல்லி தெரியும்.

1 ம் வாதியை விசாரிக்காமல் என்னை ஏன் விசாரிக்கிறீர்கள் என்றால் அவர் வயதானவர். நிரூபண வாக்குமூலத்தில் அந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

பாதை என்பதற்கான சர்வே எண் என்னவென்று கேட்டால் புல எண்கள் 340/11 ஏ, மற்றும் 340/11 பி தான் பாதை ஆகும். சர்வே எண்கள் 340/11 ஏ, மற்றும் 340/11 பி ஆனது பட்டா எண் 866 ல் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் வெள்ளைக்கோன் மகன் வெங்கு பேரில் பட்டா எண் 866 ஆக இருக்கிறது என்றால் சரிதான்.

சர்வே எண்கள் 340/11 ஏ, மற்றும் 340/11 பி – க்கு புல படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சர்வே எண்கள் 340/11 ஏ, மற்றும் 340/11 பி ஆகியவை பாதை என்று இல்லை. அது வெங்கு பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களில் பாதை என்று இல்லை என்றால் சரிதான்.

1,2 இலக்க சொத்திற்கு வா.சா.ஆ 2 ஐ தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தின் படி பாதை என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 8 பட்டா ஆனது தாவா 2 ம் இலக்க சொத்தான வெங்கு பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான்.

வழக்கு பிராதுடன் வம்சாவழி ஜாப்தா தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வம்சாவழி விபரத்தை நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு போடும் போது இரண்டு பெயர் இருந்ததால் ஒரு பெயரை போட்டேன் பின்னால் ஒரு பெயரை போட்டேன். வெள்ளையக்கோனார் தான் ஆதி பாத்தியஸ்தர் என்றால் சரிதான். அவர் என் தகப்பனாரின் தகப்பனார் ஆவார்.

வெள்ளையக்கோனருக்கு 4 ஆண்பிள்ளைகள், 2 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். அந்த 4 ஆண்பிள்ளைகள் பெயர் விபரம், வெங்கு ,முத்தையா, அழகு மற்றும் சுப்பையா என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராது, நிரூபண வாக்குமூலத்தில் 4 ஆண்பிள்ளைகளுக்கும் பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லியுள்ளேன் அதற்கு ஆவணம் உள்ளதா என்று கேட்டால் 4 பேருக்கும் தனித்தனியாக பட்டாக்கள் ஏற்பட்டுவிட்டது.

4 பேருக்கும் தனித்தனியாக பட்டா ஏற்பட்டது 1985 ல் யூ.டி.ஆர் சர்வேயில் ஏற்பட்டது என்றால் சரிதான். வெங்கு என்பவர் 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். முத்தையா என்பவரும் இறந்துவிட்டார். மலைச்சாமிக்கு புஸ்பவள்ளி என்பவர் மனைவி ஆவார். அவர் இவ்வழக்கின் 1

ம் பிரதிவாதி ஆவார்.

மலைச்சாமி வெங்குவின் மகன் ஆவார். மலைச்சாமிக்கும் புஸ்பவள்ளி உள்பட 6 வாரிசுகள் உள்ளார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் பெயர், விபரம் தெரியாது. அதனால் மலைச்சாமியின் வாரிசுகள் ஐந்து பேரை சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையை படித்துப்பார்த்தேன்.

எதிர்வழக்குரையில் வாரிசுகளை சேர்க்கப்படவில்லை என்ற விபரம் சொல்லியுள்ளதா என்றால் தெரியவில்லை. மலைச்சாமியின் மூத்த மகன் தவிர மற்ற மகன்கள், மகள்கள் பற்றிய விபரம் எனக்குத் தெரியும் என்றும் வேண்டும் என்றே அவர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல. தேசிய நெடுஞ்சாலையில் நில எடுப்பு செய்யப்பட்டதால் அதில் மலைச்சாமியின் இடம் எடுக்கப்பட்டுவிட்டதால் அவரது வாரிசுகள் ஒருவரைத் தவிர மற்றவர்களை சேர்க்கவில்லை.

இந்த விபரத்தை நான் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகவிஸ்தி சம்பந்தப்பட்ட ஆவணங்களில் தாவா 2 வது இலக்க சொத்து பாதை உள்ள விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களை பார்வையிட்டு இயற்கை அமைப்பை தெரிவிக்கும் வகையில் ஆணையர் நியமனம் செய்யவில்லை என்றால் சரிதான்.

என் தகப்பனார் மற்றும் அவரது சகோதரர்கள் 40 வருடங்களுக்கு முன்பு பூர்வீக சொத்துக்களை பிரித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அழகு தாவா 2 வது இலக்க சொத்தில் 30 வருடத்திற்கு முன்பு வீடு கட்டியுள்ளார். காட்டுராஜா காலிமனைஇடமாக போட்டுவைத்துள்ளார். முத்துச்சாமி இறந்துவிட்டதால் அவரது மனைவியை வழக்கில் 2 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவருடைய மக்கள்

வெண்ணிலா மற்றும் வெங்கட்ராமன் ஆகியோர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

முத்துச்சாமியின் மனைவி அழகை 2 ம் பிரதிவாதியாகவும், வெங்குவின் மகன் அழகை 3 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 1 வது இலக்க சொத்திற்கு அழகு ( வாதி ) பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். 1 வது இலக்க சொத்திற்கு கிழக்கே தென்வடலாக வாய்க்கால் செல்கிறது என்றால் சரிதான்.

அந்த தென்வடல் வாய்க்காலின் இருபுறமும் 1 ½ அகல வரப்பு உள்ளது என்றால் சரிதான். வாய்க்காலுக்கும் வடக்கில் வன்னிக்குடி செல்லும் தார்சாலை உள்ளது என்றால் சரிதான். அந்த வன்னிக்குடி சாலையில் இருந்து தென்வடலாக செல்லும் வாய்க்காலின் இருபுறமும் உள்ள 1 ½ அகல் வரப்பு வழியாக தாவா 1 வது இலக்க சொத்திற்கு கடந்த 40 ஆண்டுகளாக நான் சென்று வந்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் சொல்வது போல் 2 வது இலக்க சொத்தில் 10 அடி பாதை பூமியில் ஆவணங்கள் படியும் எந்த காலத்திலும் இருந்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் பாதையே இல்லாத போது பாதை உள்ளதாக கர்பணையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் பாதை இருந்திலருந்தால் யூ.டி.ஆர் சர்வே காலத்தில் பாதை என்று பதிவாகி இருக்கும் என்றால் சரிதான்.

பாதையில் நடக்கக்கூடாது என்று 15.08.2023 ம் தேதி பிரதிவாதிகள் தடுத்ததாக பிராதில் சொல்லி உள்ளதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தீர்களா என்றால் கொடுக்கவில்லை, கிராமத்தில் வைத்து பேசிப்பார்த்தோம். கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் மாரிமுத்துவை வைத்து பேசிப்பார்த்தோம். அந்த விபரத்தை நான் பிராதிலும், நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

29.09.2022 ம் தேதியில் வழக்கறிஞர் அறிவிப்பு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பியதாக சொல்லியுள்ளதில் அது மாதிரி வழக்கறிஞர் அறிவிப்பு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. வரவில்லை என்பதற்கு ஆதரமாக வா.சா.ஆ 5, 6 மற்றும் வா.சா.ஆ 7 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிவிட்டு மற்ற வாரிசுதாரர்களுக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். முத்துச்சாமியின் மனைவி அழகு ( 2 ம் பிரதிவாதி ) என்பவருக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரிதான். அவசியமற்ற தரப்பினர் என்ற முறையில் சேர்த்துவிட்டேன் என்றால் சரிதான்.

தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்திற்கு யார் யார் இழப்பீடு வாங்கினார் என்றால் எனக்குத் தெரியாது. நில ஆர்ஜிதம் ஆனது 2 ம் இலக்க சொத்திற்கு மேற்கில் சாலைக்காக எடுக்கப்பட்டது என்றால் சரிதான். நில ஆர்ஜித கோப்பு நடவடிக்கை ஆவணங்களின் படியும் 10 அடி பாதை என்பது இல்லை என்று சொன்னால் சரிதான்.

நில ஆர்ஜித நடவடிக்கையின் படி தாவா 2 வது இலக்க சொத்து சாலையை ஒட்டிய பகுதியாக மாறியதால் விலை மதிப்பு கூடியதன் காரணமாக நீங்கள் கற்பனையாக 10 அடி பாதை 2 வது இலக்க சொத்தில் உள்ளதாக வீண் விவாகாரமாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

2 வது இலக்க சொத்து பிதிவாதிகள் தனித்த பாத்தியமாகி அதில் விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, அதில் வீடுகட்டியுள்ளார்கள். தாவா பிராது சொத்து விபரத்தில் 2 வது இலக்க சொத்தில் வீடுகள் இருப்பதாக சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் பிராதில் சொல்லியுள்ளேன்.

15.08.2023 ம் தேதி பாதையில் நடக்கக்கூடாது என்று பிரதிவாதிகள் தடுத்ததாக சொல்வது தாவா வழக்கு மூலத்தில் கற்பனையாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 வது இலக்க சொத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ள விரத்தை நான் பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். பாகவிஸ்திப்படி தாவா 2 வது இலக்க சொத்து மலைச்சாமி, காட்டுராஜா மற்றும் அழகு ஆகிய மூவருக்கும் கிடைத்தது என்று சொல்லியுள்ளேன்.

1 வது இலக்க சொத்திற்கு வடக்கில் முத்தையாவின் இடம் உள்ளது. 2 வது இலக்க சொத்தின் வடக்கே சுப்பிரமணியன் நிலம் உள்ளது என்றால் சரிதான். 2 வது இலக்க சொத்து பாதையாக பயன்பட்டு வந்தது கிடையாது என்றும் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

–Sd–
Taken down by me in open court
readover/interpreted to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

–Sd–
District Munsif,
Manamadurai.